மறைந்த கீரை. தமிழ்ச்செல்வன் அவர்களின் 89 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகம் , பெரியண்ணன் மாளிகையில் , கீரை.தமிழ்ச்செல்வன் அவைக்கூடத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

கோடை கால சீசன்! தொட்டபெட்டாவில்

புதுப்பொலிவுடன் தேயிலை பூங்கா!

ஊட்டி, ஜன.20- கோடை சீசனுக்காக ஊட்டி அடுத்துள்ள தொட்டபெட்டா தேயிலை பூங்கா தயாராகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை காலமான ஏப்ரல் மட்டு மே மாதங்களில் அதிக அளவு சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு வருகின்றனர். இதனால், சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பூங்காக்களும் தயார் செய்யப்படும். இதற்காக ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, தொட்டபெட்டா தேயிலை பூங்கா, காட்டேரி பூங்கா உட்பட அனைத்து பூங்காக்களிலும் முன்னதாக மலர் நாற்றுகள் நடவு செய்யப்படும். அந்த நாற்றுகளில் ஏப்ரல், மே மாதங்களில் பல வண்ணங்களில் மலர்கள் பூத்து குளுங்கும். அதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வது வழக்கம். இந்த நிலையில், கோடை சீசனுக்காக தோட்டக்கலைத் துறை சார்பில் தற்போது அனைத்து பூங்காக்களையும் தயார் செய்யும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்டம் தானா தெருவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில்,இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே சேகர்பாபு கழக கொடியினை ஏற்றி, அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கரும்பு,இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கினார். இவ்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் சொ.வேலு, மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த விழாவுக்குகான ஏற்பாட்டை 78வது வட்ட கழக செயலாளர் சு. மனோகர் செய்தார்.

140வது வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினர் - கழக முன்னோடி

சைதை இரா.லோகநாதன் இல்ல மணவிழா!

டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

சென்னை, ஜன. 20- ஒருங்கிணைந்தசைதைப் பகுதி துணைச் செயலாளரும் 140வது வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினரும்கழகமுன்னோடியுமான சைதை இரா.லோகநாதனின் சகோதரர் குமாரசாமி - துளசி அம்மாள் ஆகியோரின்பெயர்த்தியும், கே.சுமதி - கே.நாராயணமூர்த்தி ஆகியோரின் புதல்வியுமான கே.எம்.விருதாட்சணிக்கும், சேலம் முல்லை நகர் எஸ். என்.இளங்கோ -திருமதி எம்.என்.லஷ்மிபிரியா ஆகியோரின் புதல்வருமான ஐ.பிரனேஷ் நவநீத்துக்கும் மணவிழா நாளை (21.1.2024- ஞாயிறு) காலை 10 மணியளவில் சேலம் 636 005, மெய்யனூர், சூரமங்கலம்மெயின்ரோட்டில் உள்ள ஸ்ரீ வரலஷ்மி மஹாலில்நடைபெறுகிறது.

இம்மணவிழாவரவேற்பு இன்று (20.1.2024 - சனிக்கிழமை) இரவு7மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் கழகப்பொருளாளர்-நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு,

சென்னைதெற்குமாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிர மணியன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் மாவட்டச் செயலாளர் இ.ஏ.பி.சிவாஜி, சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றுமணமக்களைவாழ்த்துகின்றனர்.

மேலும் இம்மணவிழாவில் கழக முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை பன்னீர்செல்வம் (எ) எல்.பி. செல்வம், லயன் எல்.ஜெயராமன் மற்றும்குடும்பத்தினர்வரவேற்கின்றனர்.

நீலகிரி மாவட்ட சுற்றுலாத்துறை சார்பில் பொங்கல் விழா!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் பங்கேற்று பேச்சு!

நீலகிரி, ஜன.19 - நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில், சுற்றுலாத்துறை சார்பில்நடைபெற்றபொங்கல் விழாவில், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்த தாவது:-

முதலமைச்சர் அவர்கள் இந்த பொங்கல் திருநாளை மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில், தமிழகத்தில் தமிழர்களின் மரபு, பண்பாடு கலாச்சார வழியில் ஒவ்வொரு ஆண்டும் தை மாதத்தில் தைத்திருநாள், தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழா சீரும் சிறப்புமாக நான்கு நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. சூரிய பகவானை முதலில் தரிசிப்பது தான் இப்பண்டி கையின் முக்கிய நோக்கம் ஆகும். சூரியன் இல்லையென்றால் எந்தவொரு செயலும் நடைபெறாது.எனவேசூரியபகவான், இயற்கைவளங்கள்அனைத்தையும்தரிசித்து,கால்நடைகளை வழிபட்டு இப்பண்டிகையினை கொண்டாடி வருகிறோம்.

முத்தமிழறிஞர்கலைஞர் அவர்கள் சாதி, மத, இன, மொழி, ஏழை பணக்காரன் என்ற பாகுபாடின்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தில்சமத்துவபுரம் என்றஒரு திட்டத்தினைகொண்டுவந்தார்கள். அதனடிப்படையில் எந்தவொரு பாகுபாடுமின்றி இந்த சமத்துவப் பொங்கல் விழா வானது கொண்டாடப்பட்டு வருகிறது. உழவுத்தொழில் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும்.

அனைவரும் சாதி, மத மின்றி ஒன்றுசேர்ந்து இந்த பண்டிகையைகொண்டாட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அதனைதொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள், பரதநாட்டியம், பழங்குடியின மக்களின் பாரம்பரியநடனம்போன்ற கலைநிகழ்ச்சிகளைபார்வையிட்டு அவர்களுக்கு ஊக்கத்தொகைவழங்கி,பாராட்டினார்.

முன்னதாக, சுற்று லாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் உதகையை குறித்த சுற்றுலாபயணிகள்தெரிந்து கொள்ளும் விதமாக நீலகிரி காப்பகமையத்தின்சார்பில் இயக்குநர் வேணுகோபால் அவர்களால் தயாரித்த சிறுமையேட்டினை வெளியிட்டு, சுற்றுலா பயணிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்றஉறுப்பினர்ஆர். கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், மாவட்ட ஊராட்சி தலைவர் பொன்தோஸ், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் திருமதி.ஷிபிலாமேரி,தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டலமேலாளர்குணேஷ்வரன், மாவட்ட சுற்றுலா அலுவலர் உமாசங்கர், உதகைவட்டாட்சியர்சரவணகுமார், உதவி சுற்றுலா அலுவலர் கோவிந்தராஜ், உதகை நகர்மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், மாவட்டதிட்டக்குழுஉறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம் - இளைஞரணி 2வது மாநில மாநாட்டிற்கு

நெல்லை மத்திய மாவட்டம் சார்பில் 1000 பேர் சீருடையுடன் பங்கேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.ஜன.20- நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் நாளை (21.01.2024 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் மாநில உரிமை மீட்பு முழக்க தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சீருடையுடன் 1000ம் இளைஞர்களை அழைத்துச் செல்வது என முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி இன்று (20.01.2024) மதியம் 2 மணியளவில் மாவட்ட கழகத்திலிருந்து 20 பேருந்துகளில் அழைத்து செல்லப்படுகிறார்கள்.அவர்களுக்கு தங்குவதற்கு நாமக்கல் மாவட்டம் மணியனூரில் பரமத்தி திருச்செங்கோடு சாலையில் அமைந்துள்ள கொங்கு வேளாளர் கல்யாண மண்டபம் மற்றும் அன்னமார் கோவில் திருமண மண்டபம் ஆகிய இரு திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அங்கு மாநாடு செல்லும் இளைஞர்களுக்கு (20.01.2024) இரவு உணவு மற்றும் (21.01.2024) மாநாட்டு அன்று காலை உணவும்,இரவு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மற்றும் மதிய உணவு மாநாடு குழுவினரால் மாநாட்டு பந்தலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட மற்றும் மாநகர இளைஞரணி நிர்வாகிகள் தாங்கள் கூறியபடி கழக இளைஞர்களை அழைத்து வந்து மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதுபோல மத்திய மாவட்ட ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள்,நிர்வாகிகள்,கழக சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு டி.பி.எம். மைதீன்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநாட்டில்

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை.ஜன.20- மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக மாநில இளைஞரணிச்செயலாளர்,அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (21ஆம் தேதி) சேலத்தில் இளைஞர்அணியின்இரண்டாவது மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாடு தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்ற அனைத்து மாநாட்டினையும்மிஞ்சும்வகையில்நடைபெறஉள்ளது.இந்தமாநாடு, நடைபெற உள்ள நாடாளுமன்றதேர்தலின்வெற்றிக்கு அடித்தளமாக அமையும் என்பதில் எள்ள ளவும் அய்யமில்லை. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும்வகையில்சிறப்பான முறையில் திருப்புமுனை மாநாடாக இது அமையும்.

இந்த மாநாடு குறித்து கழகஇளைஞர்அணிச்செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பு அழைப்பு விடுத்த வேண்டுகோளில்,

"நம் மாநாட்டின் நோக்கத்தைவலியுறுத்திகன்னியாகுமரியில்தொடங்கிவள்ளுவ ர் பெரியார் அண்ணா கலைஞர் மண்டலம் என தமிழ்நாடுமுழுவதும்.ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக இளைஞர் அணியினர் 234தொகுதிகளிலும்கருப்பு சிவப்பு உடைய ணிந்த இளைஞரணித் தோழர்களின்இருசக்கரவாகனஅணி வகுப்பு நடந்தது.

இதற்கிடையில், நம் கழகம் சார்பாக நீட் விலக்கு மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வலியுறுத்தி 50 லட்சம் கையெழுத்துகளைப்பெற்று அதனை சேலம் மாநாட்டில் நம் கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று திட்டமிட்டோம். ஆனால், தேனீயைக் காட்டிலும் சுறுசுறுப்பான நமது தோழர்களின் அயராத உழைப்பால் 80 லட்சம் கையெழுத்துகளையும் கடந்து,மேலும்தொடர்ந்து கையெழுத்துகள் குவிந்த வண்ணம் உள்ளன. இது தான், போர்க்களத்துக்கு தமதுவீரர்களைஒருதளபதி தயார்ப்படுத்தும் முறை. அதனை நமது தலைவர் அவர்கள், கச்சிதமாக செய்கிறார்கள். இதே தயாரிப்போடு தான் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, இந்திய ஒன்றியஅரசியலின்வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கப் போகிறது இந்த மாநாடு.

இளைஞர் அணித் தோழர்களே! வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டுக்குப் புறப்படத்தயாராவீர்.நமதுஉயிருடன்கலந்திருக்கும் முத்தமிழறி ஞர் கலைஞர் 1981ஆம் ஆண்டு இதே சேலம் ஆத்தூரில் தந்தை பெரியாரின் சிலையைத் திறந்து வைத்து ஆற்றியபேருரையில்,"ஓர்இயக்கத்தை வளர்த்தவர்கள், அந்தஇயக்கத்தோடுசேர்ந்து வளர்ந்திருப்பவர்கள் அந்த இயக்கத்திற்குப் புதிய இரத்தம் வர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அப்படி வருகின்ற புதிய இரத்தங்களை அரவணைத்து இளைய தலைமுறையினருடையஉள்ளங்களிலேஇயக்கத்தி னுடைய இலட்சியங்களைப் பதியவைக்கின்ற பணியிலே ஈடுபடுவதும், வருகின்ற இளைய தலைமுறையும் பழைய தலைமுறை பட்டபாட்டினால் அல்லவாஇந்தப்பலன்நாட்டிற்குக் கிடைத்திரு க்கிறது என்று பழைய தலைமுறைக்கு மதிப்பளித்துக் காரியமாற்றவும், இந்தஇயக்கம் நடைபோடவேண்டும்என்பதுதான் என்னுடைய ஆவலாகும்" என்று சொன்னார்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல ஒட்டு மொத்த இந்தியாவையும் காக்க" என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இம்மாநாட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில்கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் - தி.மு.க. இளைஞர் அணி

2 வது மாநில மாநாட்டில் 5000 இளைஞர்கள் பங்கேற்க முடிவு!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஜன. 20 - அரியலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,மாவட்ட கழக அலுவலகத்தில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்து கொண்டு (21 ஆம் தேதி) சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கு நமது மாவட்டத்தில் இருந்து இளைஞரணியினர் 5000 பேரும், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் எனவும்,மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், இளைஞரணி மற்றும் கழக நிர்வாகிகளுடன் உரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

நாளை ஜனவரி 21 ஆம் தேதி சேலம் பெத்தநாயக்கன் பளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி மாநில இரண்டாவது மாநாட்டிற்கு அரியலூர் மாவட்டத்தில் இருந்து 5000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள், கழக தோழர்கள் பெருமளவில் கலந்துகொள்வது என தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் மு. கணேசன், சி. சந்திரசேகரன்,

லதா பாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா. சௌந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ. கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயி கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் ,மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தியாகி விஸ்வநாத தாஸ் நகரில், சமத்துவப் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் தின விழாவை முன்னிட்டு சுமார் 250 குடும்பங்களுக்கு, பொங்கல் பொருட்கள், கரும்பு ஆகியவற்றை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், மனித உரிமை ஆணையர் வழக்கறிஞர் வி. கண்ணதாசன் கலந்து கொண்டு வழங்கினார். வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் எம். என். அஜய் தென்னவன், சி. மூர்த்தி, குமார், அண்ணாமலை, கலைமணி, மகேந்திரன், நேரு, சுரேஷ் ,சுந்தர், குகன், ஜி. சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

சேலத்தில் இளைஞர் அணி மாநாடு

பல்லாவரம் நகரக் கழகத்தினர் தங்குவதற்கான இடவசதி!

பல்லாவரம், ஜன.20- பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி பல்லாவரம் தெற்கு பகுதி மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதியைச் சேர்ந்த சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு வருகை தரும் இளைஞர் அணி மற்றும் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு உளுந்தூர்பேட்டை ஸ்ரீ மீனா மஹால் திருமண மண்டபம் 20-01-2024 அன்று மாலை முதல் 21-01-2024 அன்று மாலை வரை தங்குவதற்கு உணவிற்கும் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்பாடு செய்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் கழக தலைவர் – முதல்வர் தளபதியார் அவர்களின் திராவிட மாடலின் மாணவர்கள் நலம் காக்கும் அரசு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி நேற்று திறந்து வைத்தார். மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 7வது மண்டலகுழு தலைவரும் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 92 வது வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் பகுதி அவைத் தலைவர் எம்.கே.பி.உதயசூரியன், 91 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆ.மாலினி, வட்ட கழக செயலாளர்கள் ப.ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில், சுரேஷ் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.